பாடம் 3

# அறியப்படாத தேவன்

***நீ ஜாலியாக விளையாடிக் கொண்டிருக்கும் போது, அம்மா அழைத்தால், நீ காது கேட்காதவாறு நடிப்பது உண்டா? இயேவைப் பற்றிய பவுலின் பிரசங்கத்தை விரும்பாத சிலரும் அப்படித்தான் செயல்பட்டனர்.***

பெரோயாவிலுள்ள தேவ பக்தியுடைய சில சகோதரர்கள் அத்தேனேயில் பவுலை விட்டு விட்டு அவர்கள் தங்கள் ஊருக்குப் புறப்பட்டனர். அப்போது பவுல் அவர்களை அழைத்தார். ‘தயவு செய்து சீலாவையும், தீமோத்தேயுவையும் உடனடியாக என்னிடம் அனுப்பிவையுங்கள்’ என்று அவர்களிடம் மிகவும் அன்புடன் கேட்டுக்கொண்டார்.




அத்தேனேயில் பவுல் மட்டும் தனியே இருந்தார். தேவனைப்பற்றி அறிந்தவர்கள் ஒருவர்கூட அவருடன் அங்கு இல்லை; அந்த அத்தேனே பட்டணத்தாரும் இயேசுவை அறியாதவர்களாகவே இருந்தனர். ‘தேவனே உம் அன்பை இந்த மக்களிடம் சொல்ல எனக்கு ஒரு வழியைக் காட்டும்’ என பவுல் ஜெபித்துக் கொண்டார். அழகிய சிலைகளும், கட்டடங்களும், அழகிய கைவேலைப்பாடுகளுமாக அத்தேனே பட்டணம் காணப்பட்டது. மிகுந்த வேலைப்பாடுகளுடன் கவனமாக அழகாகக் கட்டப்பட்டிருந்த கோவில் க ளில் வெவ்வேறு வகையான, விதவிதமான சிலைகள் ஏராளமாக நிறுத்தப்பட்டிருந்தன. பட்டணம் முழுவதிலும் எங்கும் சிலைகள் காணப்பட்டது. பவுல் பட்டணத்தைச் சுற்றிப் பார்த்து வரும்போது, இத்தகைய காட்சிகளைக் கண்டு வேதனைப்பட்டார்.

அந்த அத்தேனே பட்டணத்தாரும், அங்கே தங்கியுள்ள மற்ற மக்களும் புதிய புதிய காரியங்களைக் கேட்பதில்

## மனன வசனம்

**கர்த்தர் ... நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே.**

**அப்போஸ்தலர் 17:27.**

மிகவும் விருப்பமாயிருப்பவர்கள். அதுபோல புதிய புதிய காரியங்களைச் சொல்லுவதிலும் மிகவும் விருப்பம் உடையவர்கள். இதுதான் அவர்களது பொழுதுபோக்கு. தங்களுக்கு எல்லாமே தெரியும் என்ற நினைப்பில் வாழ்ந்தார்கள். எப்பிக்கூரர், ஸ்தோயிக்கர் என்பவர்களில் ஞானிகள் எனத் தங்களைக் கருதிக்கொண்டவர்களும் அங்கேயிருந்தனர்.

எல்லாம் தங்களுக்குத் தெரியும் என்று நினைத்துக் கொண்டார்கள் இந்த மக்கள். ஆனால், உண்மையிலே அறிய வேண்டிய மிகமிக முக்கியமானதை இவர்கள் அறிந்திருக்கவில்லை. ஆம்! தேவனைப் பற்றி அவர்கள் எதுவுமே அறியாதவர்களாயிருந்தார்கள். தங்களது பரிதாபமான நிலையை அவர்கள் அறிந்திருக்கவில்லை. பவுலால் அதற்குமேலும் பொறுக்க முடியவில்லை. ஆவியில் மிகுந்த வைராக்கியம் அடைந்தார். எனவே, ஜெப ஆலயத்தில் யூதரோடும், பக்தியுள்ளவர்களோடும், தான் தினமும் சந்திக்கும் மக்கள் ஒவ்வொருவரிடமும் இயேசுவைப் பற்றிப் பேசினார்.

ஞானிகள் என அழைக்கப்பட்டவர்கள் அவரோடு தர்க்கம் செய்தனர். ஏதோ ஓர் அந்நிய தேவதையைப்பற்றிச் சொல்லுகிறான் என இயேசுவைக் குறித்தே அப்படிச் சொன்னார்கள். இயேசுவின் உயிர்த்தெழுதல்பற்றி அங்கே பவுல் பேசியது அவர்களுக்கு வியப்பாயிருந்தது.

எனவே, அவர்கள் பவுலை, மார்ஸ்மேடைக்கு அழைத்துச் சென்றனர். அங்கேயிருந்து பேச அனுமதித்தார்கள். “நீ புதிய



## செய்தி

**தேவனைப்பற்றி நான் பிறருக்குச் சொல்லும்போது தேவனைச் சேவிக்கிறேன்.**

புதிய காரியங்களைச் சொல்லுகிறாய். அதன் கருத்து என்னவென்று விளக்கமாகச் சொல்'' என்றனர்.

பவுல், ''நீங்கள் மிகுந்த பக்தியுள்ளவர்கள்; 'அறியப்படாத தேவனுக்கு' என்று ஒரு பலிபீடத்தைக் கட்டி வைத்துள்ளீர்கள். அந்த அறியப்படாத தேவன்தான் இயேசு'' என்றார். இயேசுவைப்பற்றி யாவும் கூறினார்.

ஆனாலும், அநேகர், ''நீ சொல்லுவதை அப்புறம் கேட்கிறோம்'' எனப் போய்விட்டனர். இருப்பினும், தியொனீசியு, தாமரி ஆகியோரும் இன்னும் ஒரு சிலர்மட்டுமே இயேசுவைத் தங்கள் தேவனாக ஏற்றுக் கொண்டார்கள்.

என் கண்ணே! இயேசுவே உனது தேவனாக இருக்கட்டும்.

**புதிர் 3**

***செய்முறை:*** **எந்த இடத்தில் நின்று பவுல் இயேசுவைப்பற்றி அத்தேனேயில் பிரசங்கித்தார்? இதைக் கண்டறிய இங்கே கொடுக்கப்பட்டுள்ள கோடுகளில் உள்ள புள்ளிகளை முறைப்படி எண் ஒன்றிலிருந்து இணைக்கவும். பிறகு படத்திற்கு வண்ணமிடவும். பாடத்தை நன்கு படித்து அந்த மேடையின் பெயரைக் கோட்டில் எழுதவும்.**




**மேடையின் பெயர்:** ____________